
முரசொலி பாசறை

சென்னை 27.06.2025

# திராவிடத்தால் வாழ்கிறோம்

881

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

16

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

ஆசிரியர் கி.வீரமணியுடன் மேலமெஞ்ஞானபுரம் பகுத்தறிவாளர் கழகத்தினர்.



# கடவுள் மறுப்புக்கு இலக்கணம் மேலமெஞ்ஞானபுரம்!

*1967, தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த ஆண்டு. தமிழ்நாட்டு இளைஞர்களைத் தன்னகத்தே வாரி அணைத்து வைத்திருந்த தி.மு.கழகத்தின் சூழலுக்குத் தப்பாமல், தங்களையும் இணைத்திருந்த உடன்பிறப்புகள் சீ.தங்கத்துரை, சீ.டேவிட் செல்லத்துரை. தென்காசியில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள மேலமெஞ்ஞானபுரம் இவர்களின் சொந்த ஊர். மாணவப் பருவத்திலேயே மதத்தைக் கடந்து, பகுத்தறிவுக் கொள்கைகளின் மீது நாட்டம் கொண்டிருந்தனர். தி.மு.க. கூட்டங்களில் பங்கேற்பதும், தேர்தல் பிரச்சார நாடகங்களில் நடிப்பதும், சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்வதும் இவர்களின் பணி.*

*கழகம் ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில், சட்டமன்ற உறுப்பினர் ஆலடி அருணா அவர்களின் பரிந்துரையால் தங்கத்துரைக்கு மின்சார வாரியத்தில் வேலை. தி.மு.க. உருவாகி அப்போது 20 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், பெரியாரின் மீதான பற்றை தொண்டர்கள் விட்டுவிடவில்லை. கீழப்பாவூர் வழக்கறிஞர் வை.பாண்டிவளவன், பாவூர் நாவலர், இலக்குவனார். சு.இராமச்சந்திரன் என அன்றைய தி.மு.கழக உடன்பிறப்புகள் சிலர் கொண்டிருந்த தீவிர பெரியாரிய பற்று, தங்கத்துரையையும் ஈர்த்தது. பெரியாரை வாசிக்கத் தொடங்கினார்.*


சீ.தங்கத்துரை, சீ.டேவிட் செல்லத்துரை

*திராவிடர் கழகத்தில் இருந்து தி.மு.கழகத்திற்குப் பாதையைத் திருப்பியோர் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கானோர் உண்டு. ஆனால், தி.மு.கழகத்தில் இருந்து தாய்க்கழகமான திராவிடர் கழகத்திற்கு சென்றோர் வெகுசிலர்தான். அந்த வெகுசிலர் என்ற வரலாற்றில் தன்னையும் இணைத்ததுடன், தன் சகோதரர் டேவிட் செல்லத்துரையையும் இணைத்தார் தங்கத்துரை. சொந்த ஊரில் கடும் எதிர்ப்புகளையும் மீறி, கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, சாதி ஒழிப்புக் கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினார் டேவிட் செல்லத்துரை.*

*மேலமெஞ்ஞான புரத்தில் மொத்தமுள்ள 400 குடும்பங்களில் சுமார் 300 குடும்பங்கள் கிறிஸ்தவர்கள், 100 குடும்பங்கள் இந்துக்கள். அதனால், கிறிஸ்தவத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசுவதற்கு முக்கியத்துவம் தந்தனர்.*

*1978 பிப்ரவரி 12-ஆம் நாள் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையில், சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டார் டேவிட் செல்லத்துரை. அந்த ஊர் தேவாலயத்திற்குச் செல்லாமல் நடந்த முதல் திருமணம் அதுதான். 1988-இல் தங்கத்துரையும் தென்காசிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு, மேலமெஞ்ஞானபுரத்திலேயே வசிக்கத் தொடங்கினார். இயக்கப் பிரச்சாரம் செய்வதோடு மட்டுமின்றி, ஊர் பிரச்னைகளிலும் தலையிடுவது என சகோதரர்கள் இருவரும் காட்டிய முனைப்பால், எதிர்ப்புகள் குறையத் தொடங்கின. சுமார் 15 குடும்பங்கள் இவர்களோடு கைகோர்த்தனர். பகுத்தறிவாளர் கழகத்தை அப்பகுதியில் தோற்றுவித்தனர்.*

*பொதுவாக, ‘இந்துக் கடவுள்களை மட்டும் இல்லை என்பது, இந்து மத மூடநம்பிக்கைகள் மீது மட்டும் விமர்சனம் வைப்பது’ என்பது திராவிட இயக்கத்தின் மீது சங் பரிவார்கள் திரும்பத் திரும்ப வைக்கும் விமர்சனம். எந்தப் பகுதிகளில் எந்த மதத்தினர் அதிகம் வசிக்கிறார்களோ, அந்தப் பகுதிகளில் அந்த மதத்தில் இருந்து திராவிட இயக்கத்தை நோக்கிப் பயணித்தவர்கள், அவரவர் மதங்களில் உள்ள மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள் என்பதுதான் வரலாறு. அந்த வரலாற்றுக்கு நிகழ்காலச் சான்றாக இன்றும் திகழ்கிறது மேலமெஞ்ஞான புரம்.*

*அந்த நிகழ்காலச் சான்றை வரும் வாரம் வாசிப்போம்...*

**...பயணிப்போம்.**

---

## கலைஞரைக் கொண்டாடும் `சாகித்ய அகாடமி'!

**சா**கித்ய அகாடமி நிறுவனம், புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ‘தமிழாய்வுக்கான சிறப்பு மையம்’ ஆகியவை இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிறப்புக் கருத்தரங்கினை சென்னையில் நடத்துகிறது.

சென்னை, கலைவாணர் அரங்கில், இன்றும் நாளையும் (27/28.06.2025) இரண்டு நாட்களுக்கு நடைபெற உள்ள இந்தக் கருத்தரங்கினை மாண்புமிகு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

ஆறு அமர்வுகளாக நடைபெறும் கருத்தரங்கில், அரசியல், கலை - இலக்கியம், திரைத் துறை என தான் இயங்கிய அத்தனை துறைகளிலும் உச்சம் தொட்ட ஆளுமையாக உயர்ந்து நிற்கும் கலைஞரைப் போற்றும் வகையில் தலைப்புகள் அமைந்துள்ளன.

கலைஞரின் கவிதைகள், சிறுகதைகள், புதினங்களில் திராவிடக் கருத்தியலின் தாக்கம் குறித்து, எழுத்தாளர் இமையம், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், முபின் சாதிகா, ரவிக்குமார் உள்ளிட்ட பலரும் உரை நிகழ்த்தவுள்ளனர். கலைஞர் எழுதிய திருக்குறள் உரையில் நவீனத்தன்மை குறித்து மறைமலை இலக்குவனார் பேச உள்ளார்.

ந.முருகேச பாண்டியன், ரவி சுப்ரமணியன், எல்.ராமமூர்த்தி, பழ.அதியமான், நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத் துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி, தஞ்சை தமிழ்ப் பல்கலை முன்னாள் துணைவேந்தர் ம.ராசேந்திரன் ஆகியோர் பங்கேற்று கட்டுரைகள் வாசிக்கவுள்ளனர். கலைவாணர் அரங்கம் நிறையட்டும். கலைஞரைப் போற்றும் கலை-இலக்கிய நிகழ்வு சிறக்கட்டும்!

---

## ஃப்ளாஷ்பேக்




து.மணிகண்டன்

### தலைவரைக் கண்ட தருணம்!

2011-ஆம் ஆண்டு, மலைக்கோட்டை மாநகர் திருச்சியில் நடைபெற்ற கழக மாநாட்டுக்கு, நெல்லையில் இருந்து கழகத்தினருடன் வந்திருந்தேன். தானைத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘சங்கம்’ ஓட்டலில் தங்கியிருந்து, மாநாட்டுக்கு வருகை தந்தார். தலைவரை வரவேற்கவும், அவரைக் காணும் ஆவலிலும் கழகத்தினர் காத்திருந்தோம். அப்படியான நேரத்தில், தலைவரை அருகில் காணும் வாய்ப்பு கிடைத்தது எனக்கு பெரும் மகிழ்ச்சி அளித்தது.

**-து.மணிகண்டன், பி.காம்., நெல்லை-பேட்டைப் பகுதி,**
**தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்,**
**17-வது வட்டக் கழகப் பிரதிநிதி,**
**பழையபேட்டை, திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

66

# தமிழை அழிக்க நினைக்கும் கூட்டமே...



**‘திராவிடத்தை ஒழிக்க வந்த முருகன்’ என்று சொல்லி மதுரையில் மாநாடு நடத்தி, தி.மு.க.வுக்கு அர்ச்சனை செய்திருக்கிறதே பா.ஜ.க. பரிவாரங்கள்?**

*இதன் மூலம் பா.ஜ.க.வால் நேரடியாக திராவிடத்தை ஒழிக்கவே முடியாது என்பதை மோடி முதல் நயினார் நாகேந்திரன் வரை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், ‘முருகனே துணை’ என்று நினைத்து, ஆன்மிக லேபிளில் அரசியல் மாநாடு நடத்தி, பவன் கல்யாண் போன்றவர்களை அழைத்து வந்து தமிழ் கடவுளைக் கொண்டாடுவதாக காட்டிக் கொண்டனர்.*

*ஆதித்யநாத்துக்கு முருகனைத் தெரியுமா? சிவனுக்கு முருகன் மகன் என சொல்லப்படும் கதையாவது தெரியுமா? ஸுப்ரமணியா, ஸ்கந்தன் என்ற பெயரில் ஆதித்யநாத் உள்ளிட்ட வடநாட்டவர்கள் வணங்குவது நம் ஊர் முருகனை அல்ல. அவர்கள் தனிக் கதை உருவாக்கி, அதன் பெயரில் வழிபாடு செய்கிறார்கள். அங்கே தமிழ்ப் பண்பாடு கிடையாது, தமிழ் மந்திரம் கிடையாது. தமிழ்நாட்டுக் கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்களும்கூட கிடையாது. அதனால்தான் முருகன் மாநாட்டில் பேசிய, பவன் கல்யாண் போன்றவர்கள் முருகக் கடவுள் பற்றி எதுவும் பேசவில்லை. அவர்களுக்குப் பேசவும் தெரியாது. திராவிட இயக்கங்களுக்கு எதிராகவும், பிற மதங்களுக்கு எதிராகவும்தான் பேசினார்கள்.*

> **இந்தக் கூட்டத்தின் மோசடிகளை சாதாரண மக்களே அறிந்திருக்கும்போது முருகக் கடவுளுக்கு இவர்களின் லட்சணம் தெரியாதா என்ன?**

*முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி உள்ளிட்ட பகுதிகளை மீட்பதில், திராவிட இயக்கமும் தமிழ் அமைப்புகளும்தான் முன்னணியில் நின்றன. தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகே பழனி உள்ளிட்ட அனைத்து முருகன் கோயில்களிலும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, பக்தர்களுக்கான நவீன வசதிகளும் உருவாக்கப்பட்டன. தற்போது திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவில் யாகசாலை பூசை உள்பட அனைத்திலும் தமிழ் மந்திரங்கள் ஓதப்படும் என்று தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை தெரிவித்திருக்கிறது.*

*தமிழ்க் கடவுள் முருகனுக்கு மாநாடு நடத்தி, திராவிடத்தை ஒழிப்போம் என்று கூறுகிற பா.ஜ.க.வும் அதன் பரிவாரங்களும், அந்தத் தமிழ்க் கடவுளின் கோயில்கள் அனைத்திலும் தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்றும், தமிழர்கள் அனைவரும் கருவறையில் அர்ச்சனை செய்யும் உரிமை பெற்றவர்கள் என்றும் மதுரை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார்களா?*

*பக்தர்களின் விருப்பத்தையும் உரிமையையும் நிலைநாட்டக்கூடியது திராவிடம்தான் என்பதால்தான் அதை ஒழிக்க முருகனைத் துணைக்கு அழைத்துப் பார்த்தார்கள் பா.ஜ.கவினர். இந்தக் கூட்டத்தின் மோசடிகளை சாதாரண மக்களே அறிந்திருக்கும்போது முருகக் கடவுளுக்கு இவர்களின் லட்சணம் தெரியாதா என்ன?*

*தமிழ் கடவுளுக்கு நாங்கள்தான் அத்தாரிட்டி என்பதுபோல பா.ஜ.க. காட்டிக்கொண்ட மறுநாளே அதன் தமிழ்ப் பற்று பல்லிளித்து விட்டது. ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கியுள்ள நிதி 2,532.59 கோடி ரூபாய். தமிழுக்கு ஒதுக்கியுள்ள நிதி 113.48 கோடி ரூபாய் மட்டுமே. முருகன் பெயரை சொல்லிக்கொண்டே தமிழை அழிக்க நினைக்கும் கூட்டம்தான் பா.ஜ.க.*

**...வினா தொடரும்.**

---

## கருவூலம்

### மக்களிடம் சென்ற நீதிக்கட்சி!

1940-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா நீதிக்கட்சியின் செயலாளராகத் தேர்வான பின்னர், நீதிக்கட்சி இழந்த செல்வாக்கை மீண்டும் பெற பல முற்போக்குத் திட்டங்களைத் தீட்டினார். காலத்திற்கு ஏற்ப மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, மக்களின் ஆதரவைத் திரட்டத் திட்டமிட்டார். அண்ணாவின் புரட்சிகரமான திட்டங்களுக்கு மக்களிடம் முழு ஆதரவு கிடைத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131